DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : இன்னாசி முத்து | Father/Husband Name : ராஜேந்திரன் |
| Age : 30 | Village : பெத்துரெட்டிப்பட்டி |
| Taluk : | Calling : பேக்கரி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17 Jul 2026

(Accused not Present. Petition under Section 317 CrPC filed and allowed.)

**முதல் விசாரணை** :-

1. நான் பெத்துரெட்டிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கோவில்பட்டியில் உள்ள பேக்கரியில் வேலை செய்து வருகிறேன்.

2. சுமார் 2 மற்றும் 3 ஆண்டுகளுக்கு முன்னர் எனது நண்பர் மாரிமுத்து என்பவருக்கு பாஸ் போர்ட் வெரிபிக்கேசன் வந்திருந்தது. அவருடன் நானும் சாத்தூர் தாலுகா காவல்நிலையத்திற்கு சென்றேன். அந்த சமயத்தில் போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டதால் நான் போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் எழுதப்பட்டுள்ள விபரம் பற்றி எனக்கு தெரியாது. **(பார்வை மகஜரில் உள்ள அ.சா.2 கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

3. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் இளங்கலை பட்டம் பெற்றுள்ளேன். எந்த ஒரு ஆவணத்தையும் அதன் உள்ளடக்கத்தை படித்து பார்க்காமல் கையொப்பம் செய்யக்கூடாது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் போலீசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்து கொடுத்தேன். கடந்த 14.02.2022 ம் தேதி மாலை 06.00 மணிக்கு இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் தயார் செய்த பார்வை மகஜரில் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

17 Jul 2026 12:12

Judicial Magistrate 2, Sattur